மக்களின் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 23 புதன்கிழமை (07-07-1993) UTHAYAN –A Lively National Tamil Daily கதிர் 221

# யுத்தக் கைதிகளை விடுவிக்காமல் நாங்கள் திரும்பிப் போகமாட்டோம்!

## யாழ். வந்த உறவினர்கள் திட்டவட்டமாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 7

விடுதலைப் புலிகளிடம் யுத்தக் கைதிகளாக இருக்கும் எமது உறவினர்களின்றி நாம் யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பிச் செல்லப் போவதில்லை.

—யாழ்ப்பாணம் வந்திருக்கும்—யுத்தக் கைதிகளின் உறவினர்கள்—இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றனர்.

கொழும்பில் உள்ள தனது செய்தியாளரை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. சிங்கள சேவை இத்தகவலை வெளியிட்டது.

யுத்தக் கைதிகளைப் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணம் வந்த அவர்களின் உறவினர்கள் 78 பேரில் இதுவரை 36 பேர் கொழும்பு திரும்பி விட்டனர். தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும்—எஞ்சிய 42 உறவினர்களுமே—கைதியாக இருக்கும் தமது கணவன், பிள்ளைகளை தம் தம்முடன் கூட்டிச் செல்லாமல், திரும்பப் போவதில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உடன்பாடு குழம்பியதற்கு செஞ். குழுவே காரணமாம்!

கொழும்பு, ஜூலை 7

புலிகளிடம் யுத்தக் கைதிகளாக இருக்கும் பொலீஸாரை விடுவிப்பது தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடு முறிவடைந்ததற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவே காரணம் எனக் குற்றஞ்சாட்டி அரசு சார்புப் பத்திரிகைகள் கொழும்பில் செய்தி வெளியிட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (உ-எ-6)

## யுத்தக் கைதிகளை விடுவிக்க தொடர்ந்து நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 7

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள எஞ்சிய யுத்தக் கைதிகளை விடுதலை செய்வதற்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கொழும்பு மாவட்ட சுதந்திரக் கட்சி எம்பியான நிமால் சிறிபால டீஸில்வாவின் கேள்விக்கும் பதிலளிக்கையில் அமைச்சர் விமல்விக்கிரமசிங்கா மூன்கண்ட தகவலை வெளியிட்டார் (உ-எ)

## மட்டக்களப்புப் பகுதியில் 6 வேங்கைகள் வீரச்சாவு

மட்டக்களப்பில் கடந்த வெள்ளியன்று முற்பகல் 10 மணியளவில் காஞ்சிரங்காடு என்னும் இடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் ஆறு வேங்கைகள் வீரச்சாவடைந்தனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ லெப்டினன்ட் செந்தில் (வேலுப்பிள்ளை செல்வம் — சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை)

★ லெப்டினன்ட் கவிதீஸ்வரன் அல்லது நிலான் (சிவானந்தம் அருணைநாதன் — ஊறற்றுச்சேனை, மட்டக்களப்பு)

★ இரண்டாம் லெப்டினன்ட் விஜயநாதன் அல்லது விஜி (முத்துவேல் மேகநாதன்—சந்திவெளி)

★ இரண்டாம் லெப்டினன்ட் உமாரமணன் அல்லது லோகிதன் (சின்னத்தம்பி பூபாலபிள்ளை — பெண்டுகல் சேனை, வாகனேரி)

★ இரண்டாம் லெப்டினன்ட் சிவனேந்திரன் அல்லது பிரதீபன் (விஜயரத்தினம் ரமேஸ்குமார் — கல்லடி மட்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

மட்டக்களப்பில் கடந்த 3 ஆம் திகதி இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரண்டாம் லெப்டினன்ட் வேல்நாயகம் அல்லது சித்திரன் [கந்தையா சித்திரன் — வீரமுனை) வீரச்சாவடைந்தார்.

இச்சம்பவத்தின்போது இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்த முற்பட்ட சமயம் விடுதலைப் புலிகள் திருப்பித் தாக்கினர்.

இதேவேளை— கடந்த மாதம் 27 ஆம் திகதி மட்டக்களப்பில் தேச விரோதக் குழு ஒன்று நடத்திய தாக்குதலில் 2 ஆம் லெப்டினன்ட் ரகுபரராஜ் அல்லது மதன் (டேவிற் அன்ரனி — ஆரமுகத்தான் குடியிருப்பு - மட்டக்களப்பு) என்ற போராளி வீரச்சாவடைந்தார். (உ-5)

## தபால்களை சேர்க்குக!

யாழ்ப்பாணம் ஜூலை 7

கொழும்பு செல்லும் வாதுவ கப்பலில் வெளி மாவட்டத் தபால்கள் அனுப்பப்பட உள்ளன. அதன் பொருட்டு வெளியூர் கடிதங்களை நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு முன்பதாக தபாற்பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன் கேட்டுள்ளார். [அ—17—162]

## படையினர் துப்பாக்கிச் சூடு! மண்டைதீவில் மீனவர்காயம்!!

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ். பண்ணைக் கடலோரப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்களை நோக்கி மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்து இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டதில் மீனவர்களில் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை 5-30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நாவாந்துறையைச் சேர்ந்த செபஸ்தியாம்பிள்ளை நீக்கலஸ் (வயது 22) என்பவர் வலது பக்க நெஞ்சில் படுகாயமடைந்தார். இவர் தற்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-13-15-51)

## அராலிப் பகுதியில் மீனவர் மிதிவெடியில் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜூலை 7

கடற்றொழிலுக்குச் சென்ற ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது வலது காலை முழங்காலுக்கு கீழ் இழந்தார்—

அராலி கோட்டைக்காடு கடற்கரைப் பகுதியில் நேற்றுக் காலை 5.00 மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

கிளாலையிலிருந்து இடம் பெயர்ந்து நவாலியில் வசித்து வரும் வீரசிங்கம் விக்னேஸ்வரன் என்பவரே காலை இழந்தவர் ஆவார்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [இ-12-13-15]

## பல்கலை. அனுமதி விவகாரம்: மீண்டும் நீதிமன்றம் செல்ல நடவடிக்கைக் குழு முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 7

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை அமுல் செய்வதற்கு, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுக்காததை ஆட்சேபித்து மீண்டும் சட்ட நடவடிக்கை எடுக்க பாதிக்கப்பட்ட மாணவர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் நடவடிக்கைக் குழு நேற்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் கூடி இதுபற்றி ஆராய்ந்த பின்னர் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து முடிவு செய்தது.

வடக்கு - கிழக்குக்கு வெளியே 1990 ஆகஸ்டில் நடத்தப்பட்ட ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் வடக்கு - கிழக்கில் 1991 ஏப்ரலில் நடத்தப்பட்ட உயர்தர விசேட பரீட்சை ஆகிய இரண்டையும் பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் ஒரு பரீட்சையாக கருதும்படி உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது தெரிந்ததே.

இதன்படி—

1991 விசேட பரீட்சையில் சித்தியடைந்த ஒரு தொகுதி மாணவர்களுக்கு மேலதிகமாக

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ராமேஸ்வரம் விசைப்படகு இலங்கைக்கு கடத்தப்பட்டது

ராமேஸ்வரம், ஜூலை 7

ராமேஸ்வரம், கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த விசைப் படகு ஒன்று இலங்கைக்குக் கடத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் கீழ்க்கரையைச் சேர்ந்த மீனவர் ஒருவர் இது தொடர்பாக பொலீஸாருக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து 6 பேரை பொலீஸார் தேடி வருகின்றனர்.

கடத்தப்பட்ட படகில் இலங்கைக்கு டீசல் எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (இ)

# கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பை 3 முதல் 5 மாதங்களில் நடத்தலாம்!

## தெரிவுக்குழுவிடம் நேரில் முப்படை தளபதிகள் சிபாரிசு

கொழும்பு, ஜூலை 7

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதா விடுவதா என்பது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பை கிழக்கு மாகாணத்தில் எதிர்வரும் மூன்று முதல் ஐந்து மாத காலத்திற்குள் நடத்தக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறுஇனப்பிரச்சினைக்குத்தீர்வுகாணநியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் முப்படைத் தளபதிகள் நேரில் சிபாரிசு செய்திருக்கின்றனர்.

நேற்று நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் [illegible] முப்படைத் தளபதிகள் [illegible]

சர்வஜன வாக்கெடுப்பை கிழக்கில் நடத்துவது தொடர்பான தமது கருத்தை வெளியிட்டதாக செய்தி ஏஜென்ஸிகள் குறிப்பிட்டன.

அம்பாறை மாவட்டம் தற்போது பாதுகாப்பான நிலையில் இருப்பதாகவும்—

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலேயே தற்போது பாதுகாப்பற்ற தன்மை நிலவுவதாகவும் தளபதிகள் தெரிவுக் குழுவிடம் தெரிவித்தனர். (உ-6-162)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டு

பொலிகண்டி
**கந்தவனக்கடவை கந்தசாமி கோவிலில்**
16 தினங்கள் கந்தபுராண தெய்வீகச்
சொற்பொழிவாற்றிய



'சித்தாந்த வித்தகர்' 'கலைமாமணி'
**சாம்பசிவ சோமாஸ்கந்த சர்மா**
அவர்களைப் பாராட்டி
இன்று (07-07-93) புதன் மாலை 7 மணிக்கு
**"சிவஞான பானு"**
என்னும் பட்டமளித்தலும், பொன்னாடை போர்த்தி கௌரவித்தலும், நடைபெறும்.

சிறப்பு நிகழ்ச்சியாக:
'வள்ளி திருமணம்' வில்லிசை நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து எம்பெருமானுக்கு திருக் கல்யாண வைபவமும் திருவீதி உலாவும் நடைபெறும்.

தர்மகர்த்தாவும்,
பொலிகண்டி வாழ் சைவ மக்களும்.

(26389)

---

வெளிவந்து விற்பனையாகின்றன
## அஸ்ரன் வெளியீடுகள்

- ✶ G. C. E. O/L 5 வருட கடந்தகால வினாக்களும் - விடைகளும். (எல்லாப் பாடங்களும)
- ★ G. C. E. A/L 10 வருட வினா-விடைகள். (10 பாடங்கள்)
- ✶ 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 7 வருட வினா - விடைகள்.
- ★ 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 50 பயிற்சிகள் கணிதம், தமிழ்.

யாழ். நகரில் எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மொத்தமாகப் பெற:
**அஸ்ரன் பதிப்பகம்,**
166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[சி 5356]

---

யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி
**அபிவிருத்தி நிதிக்காக**
## பழைய மாணவர் மன்றம்
நடத்தும்
## கலை விழா
✶ இலங்கை வேந்தன் குழுவினரின்
**'கதகளி பரதநாட்டியம்'**
★ சாந்தன் குழுவினரின்
**'இன்னிசை வார்ப்புகள்'**

காணத்தவறாதீர்கள்
கல்லூரி அரங்கில் 10-07-1993 பி. ப. 6 மணி
உங்கள் ஆசனங்களை உறுதி செய்ய
ரிக்கற் 100/- 50/- 20/-
கல்லூரி முன்பாக - சபாநிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(6313)

---

## 31 ஆம் நாள் நினைவலைகள்
### திருமதி நகுலராஜா நகுலேஸ்வரி

அரும்பாகி மொட்டாகி மலராகி
கரும்பாகி கணவன் கைத்தலம் தான்பற்றி
ஈராறாண்டாய் இணையிலா தவம் இயற்றி
ஈன்ற இளமொட்டை இங்கெமக்கு விட்டு
மூன்றே தினங்களில் ஓடி மறைந்தாலும்
உன் நினைவலைகள் நீங்காத
நினைவாக தொடரும் அம்மா!

அன்னாரின் பிரிவால் துயருறும் கணவன், மைந்தன், சகோதர, சகோதரி மற்றும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பானுஜா ஸ்ரோர்ஸ்

பிரதான வீதி,
கொழும்புத்துறை.

(26394)

---

## இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 7
ஜனசவிய வேலைத் திட்டங்கள் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டங்கள் இன்று முற்பகல் 9 மணிக்கு கரவெட்டி உதவி அரச அதிபர் பணிமனையிலும்—

முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறை உதவி அரச அதிபர் பணிமனையிலும் நடைபெறவுள்ளன.

(உ—5)

## நாளை

யாழ்ப்பாணக் கோட்டத்தில் ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரையான வகுப்புகளுக்கு சித்திர பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக் கால பயிற்சி வகுப்புகள் யாழ். இந்துக்கல்லூரியில் நாளையும் நாளை மறுதினமும் காலை 8 மணி முதல் நடைபெறும்.

(அ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ் பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டித் தொடரில் — 17 வயதுப் பிரிவில் — இன்று ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து சென். ஜோன்ஸ் அணி மோதும். இன்று காலை 9 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லி மைதானத்தில் இந்த ஆட்டம் ஆரம்பமாகும்.

(உ-20)

o o o

சங்கானை ஜுபிற்றர் விளையாட்டுக் கழகத்தினால் பாரதி மைதானத்தில் நடத்தப்பட்டு வரும் மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3 30 மணி:- வை. எம். எச் ஏ அணி எதிர் மாவத்தை வி. க. "ஏ" அணி.

★ 4.30 மணி:- கலைமகள் வி க. "ஏ" அணி எதிர் சங்கானை வை. எம். எச். ஏ. "ஏ" அணி.

(உ-20)

o o o

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான— மாவட்ட நிலையிலான— வலைப்பந்துப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. இன்று மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

சுண்டுக்குளி
மகளிர் கல்லூரியில்

★ 3 00 மணி:- உடுவில் மகளிர் எதிர் கனகரத்தினம் ம. ம வி —17 வயதுப் பிரிவு.

★ 3 30 மணி இளவாலை மெய்கண்டான் எதிர் யாழ் கன்னியர் மடம் த. ம. வி.— 17 வயதுப் பிரிவு.

★ 4.15 மணி:- உடுவில் மகளிர் எதிர் கனகரத்தினம் ம. ம வி —19 வயதுப் பிரிவு.

யாழ். இந்து மகளிர்
கல்லூரியில்

★ 3 00 மணி:- சண்டிலிப்பாய் இந்து ம. வி. எதிர் சாவகச்சேரி டிறிபேக்—17 வயதுப் பிரிவு.

★ 3 30 மணி: சுண்டிக்குளி மகளிர் எதிர் சாவகச்சேரி டிறிபேக்—19 வயதுப் பிரிவு.

★ 4 15 மணி:- மகாஜனா எதிர் இராமநாதன் கல்லூரி— 19 வயதுப் பிரிவு.

## சமயகுரவர் வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 7
வல்வெட்டித்துறை — உடுப்பிட்டி கொத்தணிப் பாடசாலைகளில் பயிலும் க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவருக்கு "சமய குரவர்களின் வாழ்வில்" என்ற வீடியோ படம் சிதம்பராக் கல்லூரியில் வைத்துக் காண்பிக்கப்பட உள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு இந்த வீடியோ படக்காட்சி நடைபெறும்.

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் ஆதரவில் இப்படக்காட்சி நடத்தப்படுகிறது.

---

மட்டக்களப்புப்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
டக்களப்பு)

★ வீரவேங்கை பாலசிங்கம் அல்லது சௌந்தரராஜன் (மகாலிங்கம் யோகராசா — கன்னகிபுரம் - வாழைச்சேனை)

எதிர்பாராத இந்த மோத [illegible] சேதங்கள் [illegible] தெரிவிக்கப்படுகிறது.

(உ-5)

---

சித்தன்கேணி - பெரியவளவு
## ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோவில்
## வருடாந்த (1008) சங்காபிஷேகம்

நாளை (08-07-93) வியாழக்கிழமை

தவில் நாதஸ்வர இசை வழங்குவோர்
எஸ். தில்லைநாதன் குழுவினர்
வி. கே. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி
எஸ். ஆர். சின்னராசா புதல்வர்கள்
என். ஆர். கோவிந்தசாமி புதல்வர்கள

### மாலை விசேட நிகழ்ச்சி

பாராட்டு வைபவம் —
மேற்படி ஆலய பரிபாலன சபையினரும்
சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகமும்
தேவஸ்தான தவில் வித்துவான்
**எஸ். தில்லைநாதன்** அவர்களுக்கு
தங்கப்பதக்கம் அணிவித்து,
பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார்கள்

### இசைக்கச்சேரி

இசைவேந்தன்

| | | |
|---|---|---|
| பொன் சுந்தரலிங்கம் | — | பாட்டு |
| வி. ஆர். இராதாகிருஷ்ணன் | — | வயலின் |
| எஸ். மகேந்திரன் | — | மிருதங்கம் |
| எஸ் துரைராசா | — | கெஞ்சிரா |
| மாஸ்டர் மயூரன் | — | தபேலா |

அடியார்கள் அனைவரும் திரண்டு வருக.

- ஆலய பரிபாலனசபை.

(26392)

---

## நீங்காத நினைவில் ஆண்டு -5

| பிறப்பு: | மறைவு: |
|---|---|
| 14 | 07 |
| — | — |
| 07 | 07 |
| — | — |
| 1950 | 1988 |



## அமரர் கஸ்பார் அன்ரன்
(உரிமையாளர்: அன்பன்ஸ் - சுன்னாகம்)

ஆண்டுகள் ஐந்து ஓடியதையா!
ஆனாலும் உங்கள் நிழலே இன்றும்
எமக்குக் குடையாய் நின்றுதவும்!
நிலலையை உருவாக்கி வைத்துவிட்டு
நீர் மறைந்தீர் முப்பத்தெட்டாண்டுகளில்
எம்முடல் உயிர் பிரியாது இருக்கும் வரை
உங்கள் நினைவுகளும் கூடவரும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
தாய், பேரப்பிள்ளை.

53, 3ஆம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5435)

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
10 08—1920

●

உதிர்வு:
11-07—1990

✡

திதி:
07—07—1993



அமரர்
## கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து

அன்புடனும், பாசத்துடனும் வழிநடத்தி, எமக்கு நல்வாழ்வு தந்த ஐயாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் அன்பு
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

நெட்டிலிப்பாய்,
கோண்டாவில்.

(26383)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரிப் பாதை விவகாரம்; இழுபறிக்கு காரணம் யார்?

## அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

**திங்கள் இரவு வடமராட்சியில் நடைபெற்ற கரும்புலிகள் தினக் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆற்றிய உரையின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளிவந்திருந்தது. அவரின் உரையின் மிகுதிப் பகுதி — அதாவது பூநகரிப் பாதை விடயம் தொடர்பாக அவர் ஆற்றிய உரை — இங்கே பிரசுரமாகிறது.**

பூநகரிப் பாதையில் இராணுவம் நிலைகொண்டிருப்பது உங்களுக்குத் தெரியும். இதன் காரணமாகத்தான் கிளாலிப் பாதையை நாங்கள் பாவித்து வருகிறோம். கிளாலிப் பாதையைப் பயன்படுத்துவதற்கும் கடற்புலிகள் தங்கள் உயிர்களைப் பறிகொடுத்து எமது மக்களுக்குப் பாதுகாப்பு அரணாக நின்றுதான் போக்குவரத்து நடைபெற்று வருகிறது என்பது தமிழர்களாகிய உங்களுக்குத் தெரியும்.

### யாழ்ப்பாணத்தின் கழுத்தைச் சுற்றி

சரி கஷ்ரப்படுகிறோம் சனங்களும் கஷ்டப்படுகிறார்கள். போராளிகளும் சாகிறார்கள்.

சிங்கள இராணுவம் பூநகரி சங்குப்பிட்டிப் பாதையை தடுத்து வைத்துக் கொண்டு நிற்கிறது மறுபுறம் ஆனையிறவையும் பிடித்து — வெற்றிலைக்கேணியில் இருந்து ஆனையிறவு வரைக்கும் ஒரு இராணுவ வேலியை — எட்டு மைல் நீள இராணுவ வேலியை அமைத்து 10 ஆயிரம் துருப்புக்கள் வரை குவிக்கப்பட்டுள்ளன.

பூநகரியில் இருந்து கல்முனை வரை அடுத்த பெரிய இராணுவவேலி அமைக்கப்பட்டுளளது யாழ்ப்பாணத்தின் கழுத்தைச்சுற்றி இரும்பு முள்ளால் செய்யப்பட்ட ஒரு வேலி.

### யாருக்கு இந்தத் தடை?

யாழ்ப்பாணத்தின்கழுத்தை நெரிக்கின்ற இந்த செயல் யாருக்கு எதிரானது?

புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவாம்.

விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக்கு ஆயிரம் பாதைகள் உண்டு. கலால் போவோம். கடல்நீரேரியால் போவோம், கிளாலியால் போவோம்.

அப்படியாயின் யாருக்காக இத்தடை போடப்பட்டிருக்கிறது? எங்கள் மக்களுக்குத்தான் தடைபோட்டு வைத்துள்ளார்கள். ஆனால் மக்களை நாங்கள் கொண்டு போகிறோம் என்று சொல்லித்தான் ஒவ்வொரு நாளும் கடற்புலிகள் சென்று சிங்களக் கடற்படையினருடன் போரிட்டு வருகிறார்கள்.

### பூநகரிப் பாதை விவகாரம்

இந்நிலையில் தான் ஒரு பாதையை திறந்துவிட ஐ. நா. அகதிகள் தூதரகம் முன்வந்தது.

பூநகரி பாதையைத் திறந்து மக்கள் பாதுகாப்பாகப் போவதற்கு ஒழுங்குகளைச் செய்து விடுகிறோம் என்று அவர்கள் கூறினர்.

நாங்கள் அது நல்ல விசயம் என வரவேற்றோம். சர்வதேச நிறுவனம் ஒன்று வருகிறது போக்குவரத்தை அவர்கள் கண்காணித்தால் எமது மக்கள் நிம்மதியாகப் போய் வரலாம்.

ஆனால் எமக்குத் தெரியும், ஆயுதம் தாங்கிய புலிகள் மட்டும் அவ்வழியே போக முடியாது பொதுமக்கள் போகலாம். சரி நாங்கள் போகத் தேவையில்லை. பொதுமக்கள் போனாலே சரி என நினைத்து அதுபற்றி அவர்களுடன் பேசினோம்.

இது தொடர்பாக நாம் ஒரு ஆலோசனை வழங்கினோம். நீங்கள் ஒரு சர்வதேச நிறுவனம். போக்குவரத்தை நீங்கள் கண்காணிக்கிறபோது — மக்கள் போக்குவரத்து செய்யும் வேளை — இராணுவம் சோதனையிடக் கூடாது என நாம் அவர்களுக்கு எடுத்துக் கூறினோம்.

### எமது மண்ணில் அனுமதிப்பதா?

வவுனியாவில் தினமும் சோதனை நடக்கிறது. அது அவர்களின் எல்லை. அதற்கு அப்பால் அவர்களின் தேசம் இருக்கிறது. அதற்கு அப்பால் சிங்கள தேசம் இருக்கிறது. இந்தப் பக்கம் தமிழ் தேசம் இருக்கிறது ஒரு எல்லை இருக்கிறது. அதில் அவர்கள் சோதனை செய்யலாம். அதற்கு நாங்கள் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்க முடியாது.

ஆனால் பூநகரி எங்கள் மண். அதற்குள் இராணுவம் வந்து நின்று கொண்டு - பளையில் இருந்து கிளிநொச்சிக்குப் போகிற ஒருவரை பிடித்து வைத்துக் கொண்டு சோதனை செய்வதில் என்ன நியாயம்?

அவ்வாறு இராணுவம் சோதனையிடுவதை நாம் அனுமதிப்பதாயின் ஐ நாவை நாம் ஏன் இங்கு அழைக்க வேண்டும்?

ஐ. நா. இங்கு வருவதென்றால் இராணுவத்தின் சோதனை நடவடிக்கை அங்கு நடக்கக் கூடாது. இராணுவம் எங்கள் மக்களை சோதனை செய்யக் கூடாது. ஐ நா பார்த்துக்கொண்டிருக்க அகனூடாக எங்கள் மக்கள் போய்வரவேண்டும். இவ்வாறு நாம் அவர்களைக் கேட்டுக் கொண்டோம்.

ஆனால் அதற்கு இராணுவம் என்ன கூறுகிறது? நாம அங்கு நிற்போம். மக்களை சோதனையிடுவோம் யாராவது தடை செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு சென்றால் கைது செய்வோம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இந்த நிலை இருக்குமானால எதற்காக அங்கு ஐ நா?

ஐ நா. அந்த இடத்தில் வந்து இருப்பதாயின் இத்தகைய அநியாயங்கள் எதுவும் அங்கு நடக்கக் கூடாது என கடைசியாக ஐ. நா. அதிகாரிகள் இங்கு வந்தபோது நாம் அவர்களிடம் சொன்னோம்.

### ஐ. நா. தந்த திட்டம்

ஐ நா. எங்களிடம் ஓர் ஒப்பந்தத்தை தந்துள்ளது. அந்த ஒப்பந்தத்தில் சில விதிகள் உள்ளன. அந்த விதிகளைப் பற்றித்தான் நாம் ஆராய்ந்து வருகிறோம்.

அந்த விதிகளின் பிரகாரம் இராணுவம் அங்கு நிலைகொண்டிருக்கும். மக்கள் சோதனை செய்யப்படுவார்கள். இராணுவம் எவரைத் தகுதியற்றவர் எனக் கருதுகிறதோ அவரைத் திருப்பி அனுப்பலாம்.

அப்படித் தகுதி அற்றவர் என ஒரு மனிதனை எந்த அடிப்படையில் திருப்பி அனுப்புவது? அது பற்றிய விளக்கம் எதுவும் அதில் இல்லை.

ஆனால் என்ன நடக்கும் என்பது எங்களுக்குத் தெரியும். வவுனியாவில் போன்று சில தேசவிரோதக் குழுக்களை இராணுவ சீருடை தரித்து அங்கு நிறுத்தி விடலாம். பெரும்பாலான யாழ்ப்பாணத்து மக்கள் புலிகளின் ஆதரவாளர்கள்.

15 ஆயிரம் போராளிகளின் பெற்றோர்கள் இங்கு இருக்கிறார்கள். 5 ஆயிரம் மாவீரர் குடும்பங்கள் உள்ளன. ஆயிரமாயிரம் மக்கள் புலிகளாக மாறியிருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் பூநகரிப் பாதையை கடந்து செல்லும் போது இராணுவம் அவர்களை அழைத்துக் கைது செய்யலாம். அப்படியாயின் அங்கு ஐ. நா. எதற்கு?

ஐ. நா. விதிமுறையின் படி பூநகரி பாதையால் போக்குவரத்து செய்பவர்களுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தாலோ, அல்லது அவர்கள் கைது செய்யப்பட்டாலோ, கொலை செய்யப்பட்டாலோ, அவர்கள் பொருள்கள் பறிக்கப்பட்டாலோ ஐ. நா. அதனைப் பொறுப்பேற்க முடியாது என்று உள்ளது அப்படியாயின் ஐ. நா. எதற்கு?

ஆகவே இந்த ஒப்பந்தம் எப்படி இருக்கிறது இதில் உள்ள விதிகள் எப்படி இருக்கின்றன — அது எமது மக்களுக்கு எத்துணை பாதகமாக அமைந்துள்ளது — இராணுவத்துக்கு எவ்வளவு சாதகமாக அமைந்திருக்கிறது என்பது பற்றி நாம் பகிரங்கமாக அறிவிக்க உள்ளோம் இனியும் நாம் இதை மூடி மறைத்து வைத்திருக்க முடியாது. உண்மையை மக்களுக்குச் சொல்லுவோம்

ஐ. நா. வந்து பூநகரியில் நின்று கொண்டு உங்களை பத்திரமாக அனுப்பி வைக்கப் போகிறது என நீங்கள் எண்ணுவீர்கள்.

ஐ நா பார்த்துக்கொண்டிருக்க இராணுவ சோதனையை நீக்குவதற்காகத் தான் —

இராணுவச் சோதனைச் சாவடிகள் அங்கு இருக்கக் கூடாது என்பதற்காகத் தான் —

எமது மக்கள், எமது மண்ணில் அந்நிய இராணுவத்தால் சோதனையிடப்படக் கூடாது என்பதற்காகத்தான் நாம் இந்த விடயம் பற்றி நீண்ட காலமாக பேசிவருகிறோம். ஆனால் இராணுவம் விட்டுக்கொடுக்காது.

இங்கு பொருள்கள் வந்திறங்க இராணுவம் விடவில்லை. பூநகரி பாதையால் மக்கள் சுதந்திரமாகச் சென்றுவர இராணுவம் விடவில்லை. அப்படி எந்த ஆக, எந்த நீதி, ஐ நா. என்ன செய்யப் போகிறது? இப்படியான கேள்விகளில் இதை நீங்கள் சிந்திக்கவேண்டும்

இது ஒரு முக்கியமான விசயம். எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஜனாதிபதித் தேர்தல் வருகிறது நாடாளுமன்றத் தேர்தல் வருகிறது இந்தக் கால இடைவெளிக்குள் அரசாங்கம் எதுவுமே உருப்படியாக செய்யப்போவதில்லை. இதற்கிடையில் இராணுவத்தின் கை மேலோங்கியுள்ளது

இது சமனற்ற இனப்பிரச்சினை அல்லாமல் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் மத்தியில் ஒரு மோதல் நிலையாக பார்க்கப்படுகிறது

டி. பி விஜேதுங்கா சொல்கிறார் இங்கு இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாத பிரச்சினை என்று. 60 வயது வரை அரசியல் படித்து என்ன விளங்கிக் கொண்டாரோ தெரியவில்லை

தேர்தல் வரும் வரைக்கும் தென்னிலங்கையில் இருந்து ஆட்கள் வந்து பேசுவார்கள். துறவிகள் வருவார்கள். புத்த பிக்குகள் வருவார்கள். ஆயர்கள் வருவார்கள். வந்து ஒன்றும் நடக்காது என்பது எமக்குத் தெரியும்

### ஏமாறத் தயாரில்லை

ஆகவே எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் சொல்கிறோம். சர்வதேச உலகிற்குப் புலிகள் சமாதானத்தை விரும்புகிறார்கள், பேச்சை விரும்புகிறார்கள், நீதியை விரும்புகிறார்கள் என்பதை நாங்கள் சொல்லிக்கொண்டே இருப்போம். யுத்தக் கைதிகளை விடுவிக்கவும் நாங்கள் தயாராகவுள்ளோம். ஆனால் எம் மக்களின் துன்பங்கள் தீரவேண்டும். சும்மா நாங்கள் கைதிகளை விடமுடியாது.

சிங்களவரை நம்பி நாங்கள் ஏமாறத் தயாரில்லை.

இப்படியாக சிங்கள அரசு தொடர்ந்து தமிழ் மக்களை அந்நியமாக்கி தமிழ் மக்களின் பொருளாதார வாழ்வை சீர்குலைத்து— போக்குவரத்தை தடைசெய்து— தொடர்ச்சியாக இந் நடவடிக்கைகளைச் செய்யுமானால் ஒரு விசயம் தெளிவாகத் தெரியும்

### தனியரசே ஒரே வழி

அதாவது தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன்று சேர்ந்து வாழ முடியாது. நாம் ஒரு தனியரசு அமைத்தால் தான் எமது பொருளாதார வாழ்வை மேம்படுத்தலாம் என்ற உண்மை புலனாகும்.

நீங்கள் கேட்கலாம். சிங்களவனிடம் இருந்துதானே எங்களுக்கு பெற்றோல் வரவேண்டும். டீசல் வரவேண்டும் மருந்து வரவேண்டும்.

அப்படியாயின் நீங்கள் தமிழரசு அமைப்பதாயின் எங்கிருந்து இவற்றை எடுக்கப் போகின்றீர்கள்? —என்று

நாங்கள் ஒரு தனியரசு அமைத்தால் இந்தச் சாமான்களையெல்லாம் எடுப்பதற்கு எமக்கு ஆயிரம் வழிகள் உண்டு. சிங்களவன் எங்கிருந்தையா இவற்றை எடுக்கிறான்?

அவர்கள் என்ன பெற்றோல் தயாரிக்கிறார்களா?

அவர்கள் மத்திய கிழக்கில் இருந்துதான் — அரபு நாடுகளில் இருந்துதான் பிச்சை வாங்கி - கடன் வாங்கி பெற்றோல் எடுக்கிறார்கள் அதில் ஒரு சிறு பகுதியை இங்கு அனுப்புவதற்கு தயாராகவில்லை.

நாங்கள் தனியரசு அமைத்தால் நாம் நினைத்ததெல்லாம் செய்யலாம். எங்களுக்கு என்றொரு நாடு. ஒரு சமுக பொருளாதார வாழ்வு. எங்களுக்கென்றொரு உயர் கல்வி எல்லா வளங்களையும் நாங்கள் பயன்படுத்தலாம்.

எத்தனையோ பாலைவனங்களிலெல்லாம் இன்று செல்வம் கொழிக்கும் நாடுகளாக விளங்குகின்றன. ஆகவே இலங்கைத் தீவில் சிங்களவர்களுடன் கூடி வாழக்கூடிய ஓர் அரசியல் அமைப்பு முறை— தலைவர் சொன்னார். 'வடக்கு -கிழக்கு மாகாணத்தை இணைத்து ஒரு சமஷ்டி ஆட்சியைத் தந்தால் நாங்கள் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறோம்' என்று. தருவாரா சிங்களவர்?

வட கிழக்கை எப்படியாவது பிரிக்க வேண்டும் அதற்கு தேர்தல் நடத்த வேண்டும் என்பதில்தான் கண்ணும் கருத்துமாக நிற்கிறார்கள்.

### நியாயமான நிலைப்பாடு

உங்களுக்கு நன்றாகத் தெரியும். விடுதலைப் புலிகள் நியாயமான ஒரு நிலைப்பாட்டைத்தான் கடைப்பிடிக்கிறார்கள். அரசியல் பேச்சுவார்த்தை என்றால் என்ன, அரசியல் அணுகுமுறைகள் என்றால் என்ன எல்லா வகையிலும் நாம் நியாயத்தைத் தான் கேட்கிறோம். சமாதானத்தைக் கேட்கிறோம். பேச்சுவார்த்தைகளை கேட்கிறோம் உங்களால் தரக்கூடிய ஒரு சமஷ்டியாவது தாருங்கள் என்று கேட்கிறோம். அதுவும் இல்லை என்றால் நாம் வேறு என்ன செய்வது? எமக்கு வேறு வழி இல்லையா? எங்கள் நாட்டை நாம் உருவாக்கி எங்கள் அரசை அமைப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

இதை சிங்களவர்கள் நன்றாக உணரவேண்டும். குட்டக் குட்ட குனிபவனும் மடையன் என்று சொல்லுவார்கள். எவ்வளவு காலம் நாம் கிடந்து அழுந்துகின்றோம். மக்கள் எல்லோரும் கொதித்து எழுந்து— நாமெல்லாம் ஒரு பெரிய சக்தியாக திரிந்தால் நாங்கள் எங்கள் லட்சியத்தை அடைய முடியாதா? — முடியும்! (இ-5-118)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 31 — 03 — 1944

விண்ணில்: 26 — 06 — 1992

**செல்வி பத்மாவதி பாலசிங்கம்**

(வேலணை சரஸ்வதி வித்தியாலய ஆசிரியர்)

திதி 07—07—1993

துச்சமென வாழ்வை தூக்கி எறிந்து - விட்டு
பார்மெச்ச ஆசிரியப் பணியால் - வாழ்வு
குடும்பத்தின் உயர்வுக்காய் நீங்கள் செய்த
தியாகங்கள் உணர்வூட்ட - தொடரும் கண்ணீர்
உங்களைப் பிரிந்தின்று ஆண்டொன்று
நூறானாலும் அரவணைக்கும் உங்களாத்மா
சாந்தி! சாந்தி!!

— குடும்பத்தினர்.

(6304)

---

## பிறப்பு சான்றிதழ் விண்ணப்பம்

01 - 08 - 1954 ஆம் ஆண்டுக்குப் பின் பதிவு செய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழ் பெறுவதற்கான விண்ணப்பங்கள் மறு அறிவித்தல் வரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் அறிவித்துள்ளார். (இ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய வெள்ளை, பிற வுண் பொமரேனியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. (ஏற்பு தடுப்பு, பூச்சி நீக்கி யது) தொடர்பு: F. அன்ரனி, இல. 392, பிரதான வீதி (வஸ்தியன் சந்தி), யாழ்ப்பாணம். (26386)

### இலவச திருமண சேவை

32 வயது, பரணி, செவ்வாயற்ற, நோர்வேயில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் விவாகம் செய்து அழைக்கலாம். சகல மணமக்களுக்கும் தொடர்பு: ஞாயிறு காலையில். த. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (26384)

28 வயது, சதயம், செவ்வாய் 4, பிரான்ஸில் உள்ளவருக்கு மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் அல்லது Sponsoring செய்யலாம். மணமக்களுக்கு தொடர்பு: ஞாயிறு காலையில் து விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (26371)

### மணமகள் தேவை

யாழ். பல்கலைக்கழக B.Sc. Second Class Honours, அவுஸ்திரேலியாவில் (Victoria University) Post Groduate Course in Business Computing பயிலும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். வயது 30, உயரம் 5 அடி 7 அங்., Complexion Fair, திருவோணம். பட்டதாரி விரும்பத்தக்கது. சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். இல. 538, மே/பா உதயன், யாழ்ப்பாணம் (26375)

### மணமகன் தேவை

28 வயது, பூரட்டாதி ஆசிரியைக்கு எஞ்ஜினியர், எக்கவுண்டன்ற், பட்டதாரி மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும் செ விசயரத்தினம், லக்சுமி திருமண சேவை, நவாலி கிழக்கு, மானிப்பாய். (26365)

### தேவை

இரு வருட அனுபவமுள்ள அத்துடன் Bill எழுதக்கூடிய ஆங்கில அறிவுள்ள, விடுதியில் தங்கி வேலை செய்யக்கூடிய பார் கீப்பர் (Bar Keeper) உடனடியாகத் தேவை. ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். மிகுதி விவரம் நேரில். இல. 539, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (சி-5436)

### கல்தேக்கு (கத்தாப்பு) விதை

நாற்றுமேடைப் பயன்பாட்டுக்கு கல்தேக்கு (கத்தாப்பு) விதை தேவை. தொடர்பு: மில்க்வைற். (சி-5437)

## நல்லூர் ஆலய பகுதியில் மேலும் வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நல்லூர் கந்த சுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலயச் சூழலில் உள்ள வீதிகளில் மேலும் வீதி விளக்குகள் அமைக்கப் படவுள்ளன.

யாழ். மாநகர சபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (இ-5)

## ஆலயங்களில்

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா இன்று புதன்கிழமை காலை நடைபெறும். மறுதினம் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-111)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## Dr. காசிநாதர் முருகேசம்பிள்ளை

(Rtd. R. M. P.)

தோற்றம்: **30 — 10 — 1930** மறைவு: **23 — 06 — 1989**

*திதி:* 07 - 07 - 1993


ஓடி மறைந்தன ஆண்டுகள் நான்காயினும்
நாடித்துடிப்பாய் நின் உணர்வில் யாம்
தேடி அலைகின்றோம் உன் முகம் காண!

உன் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
மருமக்கள்.

தோரையடி,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(26377)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



வேலணை கிழக்கு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
திருமதி

## இரத்தினசபாபதி நகுலேஸ்வரி

(அனுசம்மா)

வையத்துள் அறிமுகம்: **14 — 05 — 1930** தெய்வத்துள் சங்கமம்: **11 — 07 — 1990**

திதி: **07 — 07 — 1993**

அன்புத் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

122/3, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(26388)

கோப்பாய் தெற்கு
சூரியோதய சனசமூக நிலைய

# லொத்தர் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1ஆம் | பரிசு | ரிக்கெட் | இல. | 634 |
| 2ஆம் | ,, | ,, | ,, | 370 |
| 3ஆம் | ,, | ,, | ,, | 82 |
| 4ஆம் | ,, | ,, | ,, | 1106 |
| 5ஆம் | ,, | ,, | ,, | 562 |

**15 07 1993** ஆம் திகதிக்கு முன்னர் பரிசுக்குரியவர்கள் நிலையத்தில் பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவும்.

நா. வே. தம்பியப்பா,
(செயலாளர்)

(26387)

நெஞ்சம் நெகிழும்

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



வடமராட்சி கிழக்கு அம்பனைச் சேர்ந்த
திருமதி

## நகுலேஸ்வரி நகுலராசா

(நகுலேஸ்)

அன்னை மடியில்: **01 — 01 — 1954** இறைவன் அடியில்: **07 — 06 — 1993**

அன்பிற்கு இலக்கணமாய் உதித்தவரே
ஆயிரம் நினைவை எம் நெஞ்சில் விதைத்தவரே
இன்பமுற எல்லோர்க்கும் வழி சமைத்தவரே
ஈசன் அடி பெரிதென்றோ போய்விட்டீர்கள்
உம் பிரிவால் நாம் இங்கு வாடுகின்றோம்
ஊமைகளாய் நடைப்பிணமாய் வாழுகின்றோம்
என்ன குற்றம் நாம் உமக்கு செய்துவிட்டோம்
ஏன் எம்மைத் தவிக்க விட்டுச் செல்ல வேண்டும்
ஐயமில்லை பிறந்தவர்கள் இறப்பது உண்மை
ஒவ்வொரு நாளும் உம் நினைவே வாட்டுதம்மா
ஓயாது எம் துன்பம் என்றும் அலையாய் மோதும்
ஔடதமே நீர் இம் மண்ணை நீத்த போதும்
அஃகாது உம் பெருமை உம் மண்ணின் மீது

07 - 06 - 1993 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திருமதி நகுலேஸ்வரி நகுலராசாவின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், எமமோடு தோளோடு தோள் நின்று எமக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அவ்வகையில் உதவி செய்த வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தினருக்கும், பருத்தித்துறை ராஜன் எலெக்றிக்கல்ஸ் பணியாளர்களுக்கும் மற்றும் எல்லோருக்கும் எமது இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (07 - 07 - 1993) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலியில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| கணவன் | - மூ. நகுலராசா, |
| மகன் | - ந. தேவகாஸ், |
| சகோதரன் | - நி. இலங்கநாதன், |
| சகோதரி | - பா. கிரிதா. |

அம்பன்,
குடத்தனை.

(26352)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## புதுயுகம் பிறக்க மனோதிடம் தேவை

''நாம் இன அழிவை எதிர்கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம். எமக்குக் குரல்கொடுக்கவோ, கைகொடுக்கவோ உலகில் எவரும் இல்லை. நாம் தனித்து நிற்கிறோம். எமது சொந்தக் கால்களில் நிலைத்து நிற்கிறோம்.

''பலம் வாய்ந்த எதிரிகள் எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக்கட்ட உறுதிபூண்டு நிற்கிறார்கள். முழு உலகமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டு கொடுத்து வருகிறது இந்த இக்கட்டான, ஆபத்தான சூழ்நிலையில், நிர்க்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில், நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு, எமது சக்திகள் அனைத்தையும் பிரயோகித்து, ஒரு தற்காப்புப் போரை நடத்தவேண்டும்.

''இந்தத் தேவையை நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது அல்லாத பட்சத்தில் நாம் இனவாரியாக அழிந்து போவதைத் தவிர்க்கவே முடியாது''.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன், கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு, நேற்று முன்தினம் திங்கட்கிழமை கரும்புலிகள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு யதார்த்த நிலையை எடுத்துரைத்துள்ளார்,

தலைவர் பிரபாகரனது பேச்சு பந்திக்குப் பந்தி, வரிக்கு வரி, சொல்லுக்கு சொல் அர்த்தம் நிறைந்தது. ஈழத் தமிழர்களின் இன்றைய நிலையை அச்சொட்டாக எடுத்துச் சொல்வதாக அது அமைந்துள்ளது.

தமிழர்கள் சுதந்திரத்துடன், தமக்குள்ள உரிமைகளுடன் வாழ்வதைச் சிங்கள மக்களும், அவர்களின் தலைவர்களும் விரும்பவில்லை. அவ்வாறு விரும்பியிருப்பின், தமிழர்களை ஆயுதப் போராட்டம் ஒன்றுக்கு நிர்ப்பந்திக்காமல், அவர்களது சாத்வீகப் போராட்டங்களை மதித்து அவர்களுக்குச் சேர வேண்டிய உரிமைகளை வழங்கியிருப்பார்கள்

இப்போதும் கூட தமிழர்களை மனிதர்களாக மதித்து சம உரிமைகளுடன் வாழ வழி செய்ய வேண்டும் என்று மனதார விரும்பினால் இந்தப் பெரும் போரைத் தமிழர்களுக்கு எதிராகத் தொடுத்திருக்கமாட்டார்கள்.

போர் தொடங்கிய பின்னர் கூட, அதனை நிறுத்தி, தமிழர்களின் உரிமைகளை வழங்கவல்ல அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டிருக்கலாம். ஆனால் அதற்கு மனதில் விருப்பமிருந்தால் அல்லவோ, காரியம் நடக்கும். தமிழர்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி இரண்டாந்தரப் பிரசைகளாக அடிமைப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணமே சிங்களத் தலைவர்களிடம் மேலோங்கி நிற்கிறது. அவ்வாறிருக்க தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் அரசு நாட்டம் கொள்ளும் என்று நினைக்கவும் இயலவில்லை..

தமிழர்களை ஒழித்துக் கட்டச் சித்தம் கொண்டு சிங்களப் படைகள் தமிழர் பிரதேசங்களைச் சூழ்ந்து நிற்கின்றன. இது மிகவும் நன்றாகவே, வெளிப்படையாகவே தெரிந்த போதிலும் உலக நாடுகள் ஸ்ரீலங்கா அரசுக்கு நிதி என்றும் வேறு உதவிகள் என்றும் ஆதரவு நல்கி வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் தமிழர்கள் தங்களுக்குத் தற்காப்புத் தேடவேண்டிய, அதற்கான போரை நடத்தவேண்டிய தேவை ஏற்படுகிறது. இந்தத் தேவை நிர்ப்பந்தமானது தமிழர்கள் தற்காப்புச் செய்வதை தாமதித்தால் இனரீதியான அழிவு நிதர்சனமாகிவிடும்.

அதற்கு அனுமதிக்கக் கூடாது. நீதி கேட்டு நெருப்பாக எரியும் தமிழர்கள் தங்கள் எழுச்சியை மேலும் வளர்த்துச் சக்திமிக்கதாக்க வேண்டும். அந்தச் சக்தியைப் பெருக்குவதற்கு எது வந்தாலும் தளராத மனோதிடம் ஒவ்வொரு தமிழனுக்கும் அவசியம்.

அப்போது தான் அவர்கள் சுதந்திரக்காற்றைச் சுவாசிக்கும் காலம் உதிக்கும். தமக்குள்ள சகல உரிமைகளுடனும் வாழும் புதுயுகம் பிறக்கும்.

# ஈழ அகதிகளை திருப்பி அனுப்புவதற்கு தொண்டர் நிறுவனங்கள் எதிர்ப்பு

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அடுத்த மாதம் முதல் திருப்பி அனுப்பப்படுவதற்கு, தமிழ் நாட்டில் உள்ள அகதிகளுக்கு உதவும் தொண்டர் நிறுவனங்கள் பலவும் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

சென்னையில் உள்ள ''புரோ ரெக்'' நிறுவனம், அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவதை எதிர்த்து பொதுக் கூட்டங்கள் நடத்தப் போவதாகவும்—

மக்கள் ஆதரவை நாடப் போவதாகவும்—

அதற்காக தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொள்ளப்போவதாகவும் தெரிவித்துள்ளது.

திருப்பி அனுப்பும் வேலை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் மேற்பார்வையில் நடைபெறுவதாக இருந்தாலும் அகதிகள் சுயவிருப்பத்தின் பேரில் திரும்பிச் செல்லவில்லை என்றும் ''புரோ ரெக்கின்'' அமைப்பாளர் தெரிவித்தார்.

இலங்கை அகதிகள் மீது பலவிதமான கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலமும்—

அகதி முகாம்களில் நிலைமையை மோசமடையச் செய்வதன் மூலமும்—

தமிழக அரசினரும், அதிகாரிகளும் அகதிகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றனர்— அப்படி இருக்கும் போது அகதிகள் சுயவிருப்பத்தின் மூலம் திரும்பிச்செல்ல உள்ளார்கள் என்று எப்படிக் கூறுவது?— என்றும் அவர் கேட்டார்.

# அரசுடன் சேர்ந்து செயற்பட காமினிக்கு விருப்பம்!

கொழும்பு ஜூலை 7

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் நல்ல கொள்கைகளுக்கு நான் எப்போதும் ஆதரவளிப்பேன் மக்களுக்கு நன்மை விளைவிக்கும் அரசின் திட்டங்களுக்கு அரசுடன் இணைந்து செயற்படவும் நான் முடிவு செய்துள்ளேன.

இவ்வாறு ஜனநாயகஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்கா பிபிஸிக்குத் தெரிவித்தார்.

இதேவேளை —

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத்தீர்வு காண்பதற்கு தேசிய அரசு ஒன்று அமைக்கப்பட்டால் அதில் ஐ.ஐ.தே. முன்னணி சேரும் என்று அதன் செயலாளர் திரு. பிரேமச்சந்திரா தெரிவித்துள்ளார்

பிரேமச்சந்திராவின் அந்தக் கருத்தை தான் ஏற்கவில்லை என்றும், அனேகமாக அது அவரது சொந்தக் கருத்தாகவே இருக்கும் என்று தாம் நம்புவதாகவும் காமினி தெரிவித்தார். (அ-6

## மீண்டும் ..

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக அனுமதி வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது

மேலதிகமாக அனுமதி பெறும் மாணவர் எண்ணிக்கை வருமாறு:-

| | |
|---|---|
| ★ மருத்துவம் | — 03 |
| ★ பொறியியல் I | — 38 |
| ★ பொறியியல் II | — 13 |
| ★ முகாமைத்துவம் | — 59 |
| ★ வர்த்தகம் | — 97 |
| ★ கலை | — 44 |
| ★ அளவையியல் | — 07 |

இந்த எண்ணிக்கையில் பொறியியல் தவிர்ந்த ஏனைய துறையைச் சேர்ந்த மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்க உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும்—

அதனை ஆட்சேபித்தே சட்ட நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது

பொறியியல் தவிர்ந்த ஏனைய துறைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி வழங்க உடன் நடவடிக்கை எடுக்கும்படி ஆணைக்குழுவிடம் முதலில் கடிதம் மூலம் கோருவது என்றும்—

அதன்பின் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் நீதிமன்றத்திற்குச் செல்வது என்றும் நேற்றைய கூட்டத்தின் முடிவு செய்யப்பட்டது. (உ-162)

# சுங்கத் தீர்வையின்றி விவசாய உபகரணங்கள்?

கொழும்பு, ஜூலை, 5

பெரிய வெங்காயத்தையும் மிளகாயையும் பெருமளவில் செய்கைபண்ணும் விவசாயிகள் சுங்கத் தீர்வையின்றி உழவு இயந்திரங்கள் உட்பட விவசாய உபகரணங்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கும் திட்டம் ஒன்றை விவசாய அமைச்சு தயாரித்துள்ளது,

அரை ஏக்கரில் மிளகாய் மற்றும் பெரியவெங்காயம் ஆகியவற்றை செய்கைபண்ணும் விவசாயிகளும் இச்சலுகையைப் பெறுவார்கள்.

இத்திட்டத்துக்கு விவசாய அமைச்சர் தர்மதாச பண்டா விரைவில் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவார்.

மிளகாய், பெரியவெங்காயம் ஆகியவற்றில் சுயதேவையைப் பூர்த்திசெய்யுமுகமாக இத்திட்டம் அமுல் நடத்தப்படவுள்ளது

1993 ஆம் ஆண்டில் 42 ஆயிரம் மெட்ரிக் தொன் மிளகாய் தேவைப்படுகிறது; இதே அளவு பெரியவெங்காயமும் தேவைப்படுகின்றது.

1995இல் இத்தேவை 60 ஆயிரம் மெட்ரிக் தொன் ஆக அதிகரிக்கும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (த-எ)

# விண்ணப்ப விவரம் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 7

உள்நாட்டு வர்த்தக திணைக்களத்தில் தொழில் நுட்பவியலாளர் பதவிகளுக்கு ஆட்சேர்க்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அது சம்பந்தமான விவரங்கள் கொண்ட வர்த்தமானி (03-06-1993) அறிவித்தலை இல: 15, இரண்டாவது ஒழுங்கை. மின்சார நிலைய வீதி விலாசத்தில் உள்ள உதயன் பணிமனையில் பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவு தினம் நாளை மறுதினம் 9 ஆம் திகதியாகும், (அ-162]

# ஈழத் தமிழ்த் தீவிரவாதிகள் தமிழகத்தில் ஒளித்துள்ளனர்

## காங்கிரஸ் பிரமுகர் கூறுகிறார்

சென்னை, ஜூலை 7

தமிழகத்தின் பல பகுதிகளில் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் பதுங்கியிருப்பது தகவல் கிடைத்திருக்கிறது என்று காங்கிரஸ் பிரமுகரும் மாநில சட்டசபை எதிர்க்கட்சித் தலைவருமான எஸ். ஆர். பாசுப்பிரமணியம் தெரிவித்தார்

இத்தீவிரவாதிகளைக் கண்டுபிடிக்க மாநில அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்என்றும் அவர் நாகர்கோவிலில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்

தமிழ்நாட்டில் இருந்து வெடிப் பொருள்கள் தொடர்ந்து இலங்கைக்குக் கடத்தப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார் [உ-எ]

# புலிகளை வெற்றி கொள்ள ஒற்றுமை வேண்டுமாம்

## படையினருக்கு அறிவுறுத்து

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் இராணுவம் வெற்றி பெற வேண்டுமானால் இராணுவத்தில் உள்ள அதிகாரிகள் மற்றும் படையினர் மத்தியில் நிலவும் போட்டி, பொறாமைகளையப்பட்டு, ஒற்றுமை உருவாக வேண்டும்.

இராணுவத்தளபதி சிசில் வைத்தியரத்ன முற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு பிளவுபடுவதைத் தடுக்கும் இந்த யுத்தத்தில் ஒழுக்கமின்றி நடக்கும் படையினர் மற்றும் அதிகாரிகள் எவராக இருப்பினும் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

அனுராதபுரத்தில் இராணுவத்தினருக்காக பௌத்த ஆலயம் ஒன்றில் நடத்தப்பட்ட விசேட வழிபாடு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போது தளபதி இவ்வாறு தெரிவித்தார். (இ-எ)

# கனடாவில் குத்தப்பட்ட ஈழத் தமிழர் மரணம்

## சுன்னாகத்தைச் சேர்ந்தவர்

கனடா ரொஹறான்ரோ நகரில் வெள்ளை இனத்தவர் ஒருவரின் தாக்குதலுக்கு ஆளான இலங்கைத் தமிழரான குணாளன் முத்துலிங்கம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இரு தினங்களின் பின்னர் மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வீடு ஒன்றின் பல்கனியில் வைத்து மேற்படி இலங்கைத் தமிழருடன் கனடா பிரஜை ஒருவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்றும்—

பின்னர் அவர் திடீரென உடைந்த போத்தல் ஒன்றினால் இலங்கைத் தமிழரின் தலையில் குத்தினார் என்றும் கூறப்படுகிறது.

படுகாயமடைந்த நிலையில் —அதிக இரத்தப் பெருக்குடன்— ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மேற்படி இலங்கைத் தமிழர் இரு நாட்களின் பின் உயிரிழந்தார்.

இறந்தவர் யாழ்ப்பாணம் சுன்னாகத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரான கனேடியப் பிரஜை ரொஹான்ரோ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். (உ-எ)

# இருதய நோய்க்கு மக்னீசியம்

கொழும்பு, ஜூலை 6

இருதய நோயினால் ஏற்படும் மரண வீதத்தை அரைவாசியாகக் குறைக்கக்கூடியதாக மருந்து [illegible] பட்டுள்ளது.

அந்த மருந்து விலை உயர்ந்ததல்ல. சாதாரண மக்னீசியமே அதுவாகும்.

லண்டனைச் சேர்ந்த இருதய சிகிச்சை நிபுணரான [illegible] இதனைக் கண்டு பிடித்துள்ளார். [illegible]


நல்லூர் ஸ்ரீ முத்து விநாயகர் தேவஸ்தான
ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன
நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா

மகா கும்பாபிஷேகம்

1. ஆனி 27 (11 7 93 ஞாயிறு காலை 6 00 மணி முதல் — 6.20க்குள் வரும் சுபமுர்த்தம்
2. கர்மாரம்பம் — செவ்வாய் அதிகாலை (6-7-93) ஆடி 21 5.00 மணிக்கு
3. எண்ணெய் சாத்துதல் காலை 7.00 மணிமுதல் (10-7-93) ஆடி 26 மாலை 3.00 மணிமுதல்

பிரதிஸ்ட பிரதம குரு

சிவஸ்ரீ சுவாமி சுந்தரேசக் குருக்கள் தாவடி
(பிரதம குரு வண்ணை வெங்கடேசவரதராஜ சுவாமி தேவஸ்தானம்)

(5363)

தொழினுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை — 1992

உயர் கணக்கியல் தகுதித் தேர்வு புதிய பாடத்திட்ட 3 ஆம் ஆண்டுப் பரீட்சை 1993-07-12 ஆம் திகதி ஆரம்பிக்கவிருப்பதால், தேர்வுநாடிகள் 1993-07-11 ஆம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு தமது மாணவர் பிரவேச அனுமதிச் சீட்டைச் சமர்ப்பித்துப் பரீட்சைக்குரிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

— அதிபர்

தொழினுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1993-07-06

(சி/5439)

கொக்குவில் இந்துக் கல்லூரி
கல்விக் கண்காட்சி

2 ஆம் நாள் 07-07-93 —

| | | |
|---|---|---|
| நேரம் | :- | காலை 9.00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை |
| பிரதம விருந்தினர் | :- | திரு சி. வேலாயுதம் பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ். கல்விக் கோட்டம். |
| சிறப்பு விருந்தினர் | :- | திரு. க. நடேசபிள்ளை உதவிக் கல்விப் பணிப்பாளர். |

3 ஆம் நாள் 08-07-93 —

| | | |
|---|---|---|
| நேரம் | :- | காலை 9 00 மணி முதல் பி. ப. 2.00 மணி வரை |
| கௌரவ விருந்தினர் | :- | திரு. அ. பஞ்சலிங்கம் அதிபர், யாழ் இந்துக் கல்லூரி. திரு. ஆ. அரவிந்தநாதன் உதவிக் கல்விப் பணிப்பாளர். |
| சிறப்பு விருந்தினர் | :- | திரு. இளங்குமரன் பொறுப்பாளர், தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகம். |

அதிபர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி/54338)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மரியதாஸ் சந்திரமலர்

(முன்னாள் கோண்டாவில் இராமகிருஷ்ணா கல்லூரி)

எம். மரியதாஸின் அன்பு மனைவி திருமதி சந்திர மலர் (ஆசிரியை) 04-07-1993 ஞாயிற்றுக்கிழமை அன்று வவுனியாவில் காலமாகிவிட்டார். அன்னார் புன்னாலைக் கட்டுவன் வடக்கைச் சேர்ந்த காலஞ் சென்ற துரைசிங்கம் — சமனாவதி தம்பதிகளின் அன்பு மகளும், ரஞ்சிதமலர் (ராசாத்தி) (மலேசியா), சத்திய பாலன் (துரை) (கோண்டாவில்), கருணைமலர் (விஜயா) (ஜேர்மனி), சத்தியதாசன் (சிவம்), (கனடா), சத்தியலிங்கம் (பாபு) (பாபு எரிபொருள் வர்த்தக நிலையம், திருநெல்வேலி), திவ்வியமலர் (நளினி) (கனடா), சத்தியபரன் (ரகு) (ஜேர்மனி), நவமலர் (பவானி), சதீஸ்வரன் (ராஜு) (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீதரன் (மலேசியா), யோகேஸ்வரி (பவா), கமலநாதன் [ஜேர்மனி], வினோபா [கனடா], கடம்பமலர் [நயினாதீவு] துளசிகா தேவி [கோண்டாவில்], கமலகாந்தன் [பவானி ரேட்ஸ் சென்ரர் சுன்னாகம்], ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுகுணா, யமுனா, முரளி, ரூபன் [சிங்கப்பூர்] ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும், கார்த்திகா, கௌரி, கௌதமன், கிருத்திகாதரன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், வினோ, ராஜா, சுகு, தீபன், சபீ, நிருஜா, கோபிகா, கபிலன் ஆகியோரின் அன்பு மாமியாரும், லீலாவதி, பத்மாவதி, சரஸ்வதி, பூபதி, புஷ்பவதி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் சமக்கிரியைகள் 05-07-1993 திங்கட்கிழமை அன்று வவுனியாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
T. பாபு

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

[26393]

## யோன் சின்னத்தம்பி அழகரத்தினம்

(இளைப்பாறிய அதிபர், சேணியதெரு, பாடசாலை, யாழ்ப்பாணம்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த யோன் சின்னத்தம்பி அழகரத்தினம் 3-7-93 சனிக்கிழமை மாலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் (கொக்குவில்) அன்புக் கணவரும், திருமதி மேரி எட்வேட் (இளைப்பாறிய ஆசிரியர், கொழும்பு), திரு. குணரத்தினம் (இளைப்பாறிய சிறாப்பர் சாமுவேல் அன்சன்ஸ், உடுப்பிட்டி), காலஞ்சென்ற திருமதி றோஸ் வயிரமுத்து (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி ஞானம் தம்பிஐயா (இளைப்பாறிய ஆசிரியர், உடுப்பிட்டி), திருமதி பாக்கியம் (இளைப்பாறிய ஆசிரியர், லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 4-7-93 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு உடுப்பிட்டி இன்பவாசாவில் நடைபெற்று பூதவுடல் உடுப்பிட்டி சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், அன்பர்கள் அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கிறேஸ் பாலச்சந்திரன்
(மருமகள்)

32, பழம் றோட்,
கந்தர்மடம்.

(26382)

## திருமதி
## தம்பிப்பிள்ளை இன்னேசியாப்பிள்ளை
(சின்னத்தங்கம்)

கரம்பன் தெற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் புனித யுவானியார் கோவில் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இன்னேசியாப்பிள்ளை (சின்னத்தங்கம்) 06-07-1993 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், ஜேசுதாசன், ஜோர்ஜ் (கனடா) ஆகியோரின் அருமைத்தாயாரும், ஜெயராணி, சுகிர்தம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், றுக்மன், லக்ஸ்மன், நிரோஜன், டெஸ்மன், ஜெருசா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 08-07-1993 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யுவானியார் கோவில் ஒழுங்கை 30, ஆம் இலக்க இல்லத்திலிருந்து புனித யுவானியார் கோயிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு கொண்டு செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. யேசுதாசன்
(மகன்)

30, புனித யுவானியார்,
கோயில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்,

(26390)

## திருமதி
## சவுந்தரம் வினாயகமூர்த்தி

ஆடியபாத வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த திருமதி சவுந்தரம் - வினாயகமூர்த்தி 4-7-93 ல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் ஆறுமுகம் முத்துவின் அருமை மகளும், காலஞ்சென்ற கந்தையா வினாயகமூர்த்தியின் அன்பு மனைவியும், ஈஸ்வரமுத்துக்குமாரு (லண்டன், காலஞ்சென்ற புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, பாக்கியலட்சுமி (ஜேர்மனி), மகேந்திரன் (இந்தியா), யோகேஸ்வரி ஜெயசோதி (கனடா) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற வல்லிபுரம், தங்கரத்தினம், காலஞ்சென்ற தணிகாசலம், செல்வரத்தினம் (ஜேர்மனி), கணேசநாதன் (கனடா), ஆகியோரின் மாமியாரும், யமுனாராணி, குணரத்தினம்(சுவிஸ்), ரோகினி (சுவிஸ்), நந்தகுமார் (ஜேர்மனி), முரளிதரன், வக்சிதாயினி (கனடா) ஆகியோரின் பேத்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் 5-7-93 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி வ. இராஜேஸ்வரி
(மகள்)

நல்லூர் வடக்கு.

(26396)

## பாடசாலைகளில்

சரவண நாகேஸ்வரி மகா வித்தியாலய பெற்றோர் தினமும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 5 மணிக்கு பாடசாலை தற்போது இயங்கி வரும் யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் விவேகானந்த மண்டபத்தில் நடைபெறும்.

ஓய்வு பெற்ற அதிபரும் வித்தியாலய பழைய மாணவருமான திரு. வி. பொன்னுத்துரை முதன்மை விருந்தினராகவும், வேலணை கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றுவர்.

வேலணை கொத்தணி அதிபர் திரு. க. கலாதரன், வண்ணார்பண்ணை தெற்கு கொத்தணி அதிபர் திரு. து. சந்தோசம், விடுதலைப் புலிகளின் தீவகப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சி. செம்மணன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக பங்குபற்றுவர்.

o o o

தென்மராட்சி, ஜூலை 7

சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆங்கில தினம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி அருணசலம் மண்டபத்தில் அதிபர் க. சந்திரசேகரா தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக ஆங்கிலத்துறைத் தலைவர் டாக்டர் சுரேஷ் கனகராசாவும் சிறப்பு விருந்தினராக யாழ். கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆங்கிலம்) திரு. ஆர். கைலநாதனும் பங்குபற்றுவர்.

(உ-117)

o o o

யாழ்ப்பாணம், ஜூலை 7

இன்று நடைபெறும் யாழ். புனித மரியாள் வித்தியாலய முத்தமிழ் விழாவின் இறுதி நிகழ்ச்சியாக திரு. செ. மற்றாஸ் மயில் நெறியாக்கம் செய்த "காத்தவராயன்" சிந்துநடைக் கூத்து நடைபெறவுள்ளது.

அதற்கு முன்னர் திரு. மற்றாஸ் மயில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார். (அ)

## சீல் வைப்பு

தென்மராட்சி, ஜூலை 5

நிர்ணய விலையை பார்க்கிலும் கூடுதல் விலைக்கு சைக்கிள்கள் விற்பனை செய்த வர்த்தக நிலையங்கள் சீல் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் கிளிநொச்சியில் இச் சம்பவம் இடம்பெற்றது. (த-117)

## யுத்தக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது யுத்தக் கைதிகளாக இருக்கும் 83 பேரையும் அவர்களது உறவினர்கள் 42 பேரையும் விடுதலைப் புலிகள் வசதியான ஹோட்டல் ஒன்றில் வைத்துப் பராமரித்து வருகிறார்கள்.

யுத்தக்கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாடு முறிவடைந்திருக்கும் இவ்வேளையில்—

யுத்தக் கைதிகளின்றி திரும்பப் போவதில்லை என்று அவர்களின் உறவினர்கள் அறிவித்திருப்பது ஸ்ரீலங்கா அரசுக்கு மேலும் நெருக்கடியைத் தோற்றுவித்திருப்பதாக அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (உ-6)

# மரண அறிவித்தல்

## திருமதி
## அருளம்பலம் புஸ்பராணி

அராலியைச் சேர்ந்த திருமதி அருளம்பலம் புஸ்பராணி நேற்று காலமானார். இவர் சி. அருளம்பலத்தின் அன்பு மனைவியும், சுபத்திரா, வாசுகி, சுகிர்தா, துஷ்யந்தி ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் அடக்க ஆராதனை 7-7-93 இன்று காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

அராலி வடக்கு,
[illegible]

(26398)


# தர்மிஷா ட்ரவல்ஸ்

✻ வெளிநாட்டுப் பிரயாணத்திற்குத் தேவையான சகல பயண வசதிகளையும் வவுனியாவில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

✻ வெளிநாட்டு பயணத்துறையில் நிறைவான சேவையைப் பெற்று உங்கள் நேரத்தையும், பணத்தையும் மீதப்படுத்துங்கள்.

**உங்கள் தேவையே எமது சேவை**

**தர்மிஷா ட்ரவல்ஸ்**

58, புதிய பஸ்நிலையக் கட்டிடம்,
முதலாம் மாடி, கண்டி வீதி,
வவுனியா.

(6316)


# மரண அறிவித்தல்கள்

## றோசலின் (பேபி) அந்தோனிப்பிள்ளை

பண்டத்தரிப்பைச் சேர்ந்த றோசலின் [பேபி] அந்தோனிப்பிள்ளை காலமானார்.

இவர் இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர் ம. அந்தோனிப்பிள்ளையின் அன்புமனைவியும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், திருமதி மேரிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆகியோரின் புதல்வியும், இளங்கோ (ஜேர்மனி), சேரன் (லண்டன், ஜீவகன் (லண்டன்] காலஞ்சென்ற உதயன், நிர்மலா (பாபு], (ஆசிரியை, இளவாலை புனித என்றியரசர் கல்லூரி), சியாமளா (பாமா), (ACCOUNTING SYSTEM AND SERVICE JAFFNA), சிபிலா (பப்சி], [மாணவி - இளவாலை கன்னியர்மடம் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பிரிய அன்னையும், டொறத்தி [ஜேர்மனி], சாந்தி[லண்டன்) ஆகியோரின் மாமியாரும், மார்க் அன்ரனியின் பாட்டியாரும், அல்பிறட் [கொழும்பு], ஜெயசீலன் (லண்டன்) திருமதி ராணி பத்மநாதன் [ஆசிரியை - பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி) ஆகியோரின் சகோதரியும், யோசவ் ராஜா) ஓய்வுபெற்ற அதிகாரி, வேலணை ஊர்காவற்றுறை அரச அதிபர் அலுவலகம்), பிரான்சிஸ்சேவியர் (கொழும்பு - கார்க்கோ நிறுவனம்), ஜெயரத்தினம் (முகாமையாளர் நீகல் சினிமா - நீர்கொழும்பு) ஆகியோரின் மைத்துனியுமாவர்.

அன்னாரது பூதவுடல் பண்டத்தரிப்பிலுள்ள அவரது இல்லத்திலிருந்து 08-07-1993 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லடக்கத்துக்காக பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
ம. அந்தோனிப்பிள்ளை
(கணவர்)

பொந்தி லேன்,
பண்டத்தரிப்பு.

(6312)

## திருமதி பரமேஸ்வரி மாணிக்கம்
(பராசக்தி)

புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், தற்பொழுது ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்டிருந்த பரமேஸ்வரி மாணிக்கம் (பராசக்தி) அவர்கள் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற மருதானை பழக்கடை மாணிக்கம் அவர்களின் அன்பு மனைவியும், பத்மாவதி, பவளம், மகேஸ்வரி தியாகராஜா (சட்டத்தரணி — ஆனைக்கோட்டை), மணிவாசகம், மாயாவதி, தங்கேஸ்வரன் (K.M.T ஸ்ரோஸ், மருதானை), காலஞ்சென்ற வரலெட்சுமி, காலஞ்சென்ற சடாச்சரதேவி, பேரின்பமூர்த்தி (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செ. குணரெத்தினம் (புவனேஸ்வரி ஹாட்வெயார்ஸ் ஸ்ரோஸ்), ந. பொன்னையா (முன்னாள் இந்தியன் ஓவசீஸ் வங்கி உத்தியோகத்தர்), க. சோமசேகரம்பிள்ளை (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்), இ. இராசலிங்கம் (விமல் சன்ஸ், மாயா ரேடிங் கொம்பனி—ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு), இரதி (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), சிவகாமசுந்தரி, தவமணிதேவி, வாசுகி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் (7-7-93) இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மா. தியாகராஜா
(மகன்)

"துளசி"
வினோக் வீதி,
ஆனைக்கோட்டை.

(26397)

## வல்லிபுரம் பஞ்சாட்சரம்

வல்லிபுரம் பஞ்சாட்சரம் ஜேர்மனியில் 02-07-93 இல் காலமானார்.

இவர் பூமாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் வல்லிபுரம் —செல்வநாயகி ஆகியோரின் அன்பு மகனும், கைதடியைச் சேர்ந்த திரு- திருமதி கந்தையா ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற உமாமகேசன் (சொக்கா), அம்பிகைபாகன், தனநாயகம் (சவுதி), காலஞ்சென்ற வாகீஸ்வரி (சிங்கப்பூர்), Dr. யோகீஸ்வரி (குகன் வைத்தியசாலை), ஜெகதீஸ்வரி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம் (சிங்கப்பூர்), Dr. சிவபாதம் [குகன் வைத்தியசாலை], மயில்வாகனம், இராசதுரை (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. ஆ. சிவபாதம்
(மைத்துனர்)

குகன் வைத்தியசாலை,
மல்லாகம்.

(26399)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேற்] லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org